

திருச்சி பஞ்சப்பூரில் உள்ள கலைஞர் பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் ஆம்னி பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்ட கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், நகரப் பொறியாளர் சிவபாதம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.




தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்டம் 5 சட்டமன்றத் தொகுதிகளின் பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஆய்வு கூட்டத்தில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை,நெடுஞ்சாலைத்துறை அமைச்சரும், வடக்கு மண்டலத் தேர்தல் பொறுப்பாளருமான எ.வ.வேலு தேர்தல் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கி பேசினார். உடன் தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி., தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் மற்றும் பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஓமலூர் கருக்கல் வாடியில், “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தில் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாவட்டச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு செய்து மனுக்கள் மீது உடன் நடவடிக்கை எடுத்து, மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்று தர கேட்டுக் கொண்டார். உடன் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, மாநகரச் செயலாளர் பா.ரகுபதி மற்றும் துறை அலுவலர்கள் உள்ளனர்.



கரூர் மாவட்டக் கழக இளைஞரணியின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் நல்லாட்சியின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் கரூர் வடக்கு ஒன்றியம் சார்பாக, மண்மங்கலம் கிழக்கூரில் நடைபெற்றது. கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் கரூர் முரளி, இளம் பேச்சாளர் கேத்ரின் மேல்ரினா சிறப்புரையாற்றினர்.


